இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 3
இறுதிப் பரீட்சை 2007
இலங்கை சட்டங்களுக்கான அறிமுகம் - LWU 1411
காலம்: 03 மணித்தியாலம்

திகதி: 09.03.2007 நேரம்: மு.ப 10.00 – பி.ப 1.00 மணி வரை

ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. "பிரித்தானியர்கள் ஸ்தாபிக்கப்பட்ட நிர்வாக விதிகளுக்கமைய தமது காலணித்துவ நாடுகளை ஆட்சிசெய்தனர். பிரித்தானியர்களால் கைப்பற்றப்பட முன்பு நடைமுறையில் இருந்த சட்டங்களும் நிறுவனங்களும் தொடர்ந்து இருக்கும் என்பது அத்தகைய விதிகளில் ஒன்றாகும். இதற்கமைய இலங்கையில் அனைத்து டச்சு நியதிச்சட்டங்களும் பிரயோகிக்கப்பட்டது என்ற ஊகத்திற்கு விளைவு பயன் வழங்குவதன் மூலம் நீதிமன்றங்கள் தமது கடப்பாட்டை பூர்த்தி செய்தன".

நியதிச்சட்டங்கள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பவற்றிற்கு விசேட அவதானம் வழங்கி இக்கூற்றினை விமர்சித்து பரீட்சிக்க.

2. ஜயந்த கண்டி பொது வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியன் ஆவான். அவனது பெற்றோர் மாத்தளையை நிரந்தர வசிப்பிடமாக கொண்டவர்களாவர். அவனது தந்தை கரையோர சிங்கள குடும்பத்தின் பின் சந்ததி ஆவதோடு அவர் கண்டியரான ஜயந்தவின் தாயாரை 1951ஆம் ஆண்டு பின்ன திருமணம் (binna) செய்து கொண்டார். அதே வைத்தியசாலையை சேர்ந்த சந்துனி என்ற வைத்தியரோடு ஜயந்தவிற்கு காதல் ஏற்பட்டது. அவளது தந்தை தென்மாகாணத்தை சேர்ந்த ஒரு குடும்பத்தில் இருந்து வந்த பின்சந்ததி ஆவதுடன் கண்டியரான சந்துனியுடைய தாயாரை திருமணம் செய்து கொண்டார். அவளுடைய தந்தையும் தாயும் தமது திருமணத்தை 1960ஆம் ஆண்டு பொதுச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து சந்துனியுடைய தந்தையாரின் சொந்த பணத்தில் கட்டப்பட்ட கண்டியிலுள்ள புதிய வீட்டில் அவர்கள் இருவரும் வசித்து வந்தனர்.

ஜயந்த, சந்துனி ஆகிய இருவரும் தமது திருமணத்தை கண்டிய சட்டத்தின் கீழ் பதிவு செய்ய விரும்புகின்றனர்.

(அ) ஜயந்த, சந்துனி ஆகியோர் தமது திருமணத்தை கண்டியச்சட்டத்தின் கீழ் பதிவு செய்ய முடியுமா?

(ஆ) 1950ஆம் ஆண்டு, சந்துனியுடைய தந்தை சந்துனியுடைய தாயாருடன் தனது திருமணத்தை கண்டியச்சட்டத்தின் கீழ் பின்ன திருமணம் ஒன்றாக பதிவு செய்திருப்பின் உமது விடை வேறுபடுமா?

நியதிச்சட்டங்கள் மற்றும் நீதிமுறை தீர்ப்புக்கள் ஆகியவற்றை கொண்டு உமது விடையை ஆராய்க.

3. 1976ஆம் ஆண்டு செல்வம் அவுஸ்திரேலியாவில் தமிழ் பெற்றோருக்கு பிறந்தான். அவனுடைய பெற்றோர் யாழ்ப்பாண தமிழர்கள் ஆவர். அவனுக்கு 7 வயதாக இருந்தவேளை அவனது பெற்றோர் இலங்கைக்கு திரும்பி வந்தவுடன் யாழ்ப்பாணத்திற்கு சென்றனர். அவன் தனது கல்வியை யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் மேற்கொண்டான். அவன் 1966ஆம் ஆண்டு ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு உட்பிரதேசித்தான். அவன் தனது பட்டப்படிப்பை பூர்த்தி செய்ததை தொடர்ந்து அதே பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராக கல்விசார் ஊழியர்களுடன் இணைந்து கொண்டான். 2001ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரான மந்திராவை திருமணம் செய்து கொணடான். அவளும் யாழ்ப்பாணத்தை சொந்த இடமாக கொண்டவள். அவளுடைய பெற்றோரும் தமிழர்கள் ஆவர். திருமணத்திற்கு பின்பு தெஹிவளையில் உள்ள மந்திராவுடைய பெற்றோரால் கொடையளிக்கப்பட்ட வீட்டில் இருவரும் வாழ்ந்துவந்தனர். திருமணத்தின் விளைவாக ஒரு பிள்ளையை அவர்கள் பெற்றெடுத்தனர். அவளுக்கு ஜெயகுமாரி எனப்பெயரிடப்பட்டது. 2003ஆம் ஆண்டு ஜய்குமாரி பிறந்த பின்பு செல்வம் அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து செல்ல தீர்மானித்தான். மந்திரா தனது தொழிலை இராஜினாமா செய்ததுடன் யாழ்ப்பாணத்திற்கு சென்று செல்வத்தினுடைய பெற்றோருடன் அவர்களது வீட்டில் வசித்து வந்தாள். யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணி பாடசாலையொன்றில் ஜெயகுமாரி அனுமதிக்கப்பட்டாள். செல்வம் வழமையாக அவர்களை சென்று பார்த்து வருவான். 2004ஆம் ஆண்டு செல்வம் யாழ்ப்பாணத்தில் புதிய வீடொன்றை கட்டியதுடன் தனது பெற்றோரை மந்திராவுடன் அவ்வீட்டில் சென்று வசிக்குமாறு கூறினான். அத்துடன் அவன் யாழ் பல்கலைக்கழகத்தில் இணைந்து கொள்ள எதிர்பார்த்தான் எனினும் அவனது எண்ணம் நிறைவேற வில்லை. செல்வம் தெஹிவளையில் புதிய கட்டிடம் ஒன்றை வாங்கி உயர்தர மாணவர்களுக்கு தனிப்பட்ட வகுப்புகளை ஆரம்பித்தான். அவன் தனது டியூஸன் வகுப்புகள் மூலம் இலாபங்களை பெற்றான். அவன் தனது வருமானத்தில் ஒரு பகுதியை கொழும்பிலுள்ள ஒரு நிதிக்கொம்பனியில் முதலீடு செய்தான். அவன் தனது மனைவிக்கு கிரமமாக பணம் அனுப்பி வந்தான். 2006ஆம் ஆண்டு செல்வம் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்த வேளையில் அநுராதபுரத்தில் வைத்து விபத்து ஒன்றில் சிக்கி சடுதியாக இறந்தான்.

செல்வம் தேசவழமை அல்லது பொதுச்சட்டத்தின் கீழ் ஆளப்படுகிறானா என்பது தொடர்பில் மந்திரா உம்மிடம் ஆலோசனை கோருகின்றாள். அவளுக்கு ஆலோசனை வழங்குக.

செல்வத்தினுடைய சொந்த இடம் திருகோணமலையாக இருந்து அவனது குடும்பம் அங்கு வாழ்ந்து இருப்பின் உமது விடை வேறுபடுமா?

4. "இலங்கையில் முகமதிய கோவை தெளிவாக அதன் பயன்பாட்டின் அடிப்படையில் இருப்பதுடன், சில விடயங்களில் இக்கோவை மௌனம் சாதிக்கும் வேளையிலும், எண்பிக்கப்பட்ட புராதன வழக்காறு ஒன்று இல்லாத வேளையிலும் தீவினுடைய பொதுச்சட்டம் ஏற்புடையதாகும்". (எனிஸ் நீதிபதி அப்துல் ரகுமான் எதிர் உஸான் உம்மா(1916) 19 டேசு பக்கம் 175-178)

நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்களுடன் இக்கூற்றினை விமர்சித்து மதிப்பிடுக.

5. "உரோமன் டச்சு சட்டத்தின் தூய்மை மற்றும் இலகுத்தன்மை அதனுடைய தோற்றப்பாட்டில் இந்நாட்டில் நடைமுறையில் இருக்கவில்லை. அது, எமது நியதிச்சட்டம் மற்றும் நீதிமுறைத் தீர்ப்புகளால் பல்வேறு வழிகளுக்கு மெருகூட்டப்பட்டுள்ளது".

[கொரசா இரப்பர் கொம்பனி எதிர் சில்வா 1917(20NLR 65) Wood Renton C.J பக்கம் 74]

நீதிமுறைத் தீர்ப்புக்களின் மூலம் ஆங்கிலச்சட்டம் இலங்கைக்கு வரவேற்கப்பட்ட விடயத்துடன் தொடர்புறுத்தி இக்கூற்றினை விமர்சித்து ஆராய்க.

6. "இந்நாட்டின்து பொதுச்சட்டம், கண்டியச்சட்டம், முஸ்லிம் சட்டம் என்பவற்றின் கீழ் திருமணமான பெண் ஒருவர் தனிப்பெண்ணாக(Femi Sole) இருந்த போதிலும் தேச வழமையின் கீழ் ஆழப்படுகின்ற திருமணமான பெண் இன்னும் கணவனுடைய மணம்சார் அதிகாரத்தின் கீழேயே இருக்கின்றாள்". – தம்பையா நீதியரசர் - விஜயரத்தினம் எதிர் ராஜதுரை 1966 – 69 NLR 146 – 148

தேசவழமையின் கீழ் தனது மனைவியினுடைய தனிப்பட்ட ஆதனம் மீது கணவனுக்குள்ள மணம் சார் அதிகாரம் தொடர்பிலான நீதிமுறை கொள்கையுடன் இக்கூற்றினை ஆராய்க.

7. இலக்கம் 44, 1973ஆம் ஆண்டு நிர்வாக நீதிமுறை சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்ற முறைமையைப் பற்றி விரிவான குறிப்பொன்றை எழுதுக.

8. (அ) காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட தசாப்த காலத்தில் கண்டிய ராஜதானியின் கீழ் நீதிநிர்வாகம் தொடர்பில் பின்வரும் நீதிமுறை அமைப்புகள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஆராய்க.

   (i) அரசன் (King)
   (ii) அதிகாரம் வரு (Adigars)
   (iii) திசாவையர் (Disavas)
   (iv) ரட்டசபா (Ratasabhava)
   (v) கம்சபா (Gamsabha)

(ஆ) டச்சுக்காலப்பகுதியின் போது நடைமுறையில் இருந்த நீதிமன்ற அமைப்பின் பதவணியை, ஒவ்வொரு நீதிமன்றத்தினாலும் பிரயோகிக்கப்பட்ட நியாயாதிக்கத்திற்கு விசேட அவதானம் வழங்கி விளக்குக.

(பதிப்புரிமைபெற்றது)